දුරකථන / தொலைபேசி இல. / Telephone Nos.:

අමාත්‍යතුමා / அமைச்சர் / Minister — 2784832, Fax: 2784825

ලේකම් / செயலாளர் / Secretary — 2784812

කාර්යාලය / அலுவலகம் / Office — 2785141– 50, Fax: 2784846

ඊමේල් / ஈ-மெயில்/E - mail: isurupaya@moe.gov.lk

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

"ඉසුරුපාය"
බත්තරමුල්ල.
"இசுருபாய"
பத்தரமுல்ல.
"Isurupaya"
Battaramulla.

ඔබේ අංකය / உமது இல. / Your No. ..........................

මගේ අංකය / எமது இல. / My No. ED/01/12/01/01/பல்

දිනය / திகதி / Date 2010.04.23

**சுற்றறிக்கை இல : 2010/19**

சகல மாகாணக் கல்விச் செயலாளர்கள்,
சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல பாடசாலை அதிபர்கள் மற்றும்
சகல பிரிவெனாக்களினதும் பொறுப்பாளர்கள்.

## மாகாண அரச சேவையிலிருந்து தேசிய பாடசாலை சேவைக்கு தேவையின் அடிப்படையில் ஆசிரியர்களைச் சேர்த்துக்கொள்ளல்

அரச சேவை ஆணைக்குழு சபை செயலாளரின் இலக்கம் க.சே.கு/ஆசி5 மற்றும் 2003.06.10ஆம் திகதிய கடிதத்திற்கமைய 1989.12.31ஆம் திகதிக்கு முன்னர் முதல் நியமனம் பெற்ற ஆசிரியர்களுக்கு மாத்திரம் தேசிய பாடசாலை சேவைக்கு இடமாற்றம் பெற்றுக்கொள்ள விதிக்கப்பட்டிருந்த எல்லை இல. 09/1991/316/071 மற்றும் 2009.10.28ஆம் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கமைய நீக்க தீர்மானிக்கப்பட்டதாக இத்தால் அறியத்தருகிறேன்.

இதற்கமைய முதல் நியமனத் திகதியை கருத்திற்கொள்ளாது ஆசிரியர்களுக்கு சேவையின் தேவையின் அடிப்படையில் தேசிய பாடசாலைகளில் காணப்படும் அவ்வவ் பாடங்களின் வெற்றிடங்களுக்காக இடமாற்றம் வழங்கமுடியும்.

அவ்வவ் மாகாண சபைகளினால் தீர்மானிக்கப்பட்ட நிபந்தனைகளின் கீழ் விடுவிக்க முடியுமான பாடங்களுக்கு உரிய ஆசிரியர்களை மாத்திரம் தேசிய பாடசாலை சேவைக்கு விடுவிக்க மாகாணப் பொறுப்பாளர்களினால் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். அம்மாகாணங்களில் சேவையாற்றிய கால எல்லை மற்றும் மாகாணங்களினால் தீர்மானிக்கப்படும் ஏனைய நிபந்தனைகளின் கீழ் இவ் விடுவிப்பு மேற்கொள்ளப்படவேண்டும்.

தேசிய பாடசாலை சேவைக்கு சேர்த்துக்கொள்ளும்போது தேசிய பாடசாலை முறைமையில் ஆசிரிய தேவைகள் காணப்படும் பாடங்களுக்காக மாத்திரம் மாகாணத்திலிருந்து விடுவிக்கப்படும் ஆசிரியர்களை சேர்த்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் இதன்போது மாகாண அரச சேவையின் 05 வருட சேவைக்காலத்தை பூர்த்திசெய்திருப்பதும் முதல் நியமனக் கடிதம் மூலம் நியமிக்கப்பட்டுள்ள பாடசாலைகளில் கட்டாய சேவைக்காலம் பணிக்கப்பட்டிருப்பின் அக்காலத்தை

பூர்த்திசெய்திருக்கவேண்டியமை அத்தியவசியமாகும். இவ்வாறு தேசிய பாடசாலை சேவைக்கு சேர்த்துக்கொள்ளும்போது இதற்கு முன்னர் மாகாண அரசசேவையின் ஆசிரியர்கள் தேசிய பாடசாலை சேவைக்கு இடமாற்றம் மேற்கொள்ளும்போது பின்பற்றிய ஒழுங்கு விதிமுறைகளை பின்பற்றவேண்டும்.

இவ்வாறு தேசிய பாடசாலையின் சேவைக்கு சேர்த்துக்கொள்ளும் ஆசிரியர்கள் இடமாற்றம் மேற்கொள்ளப்பட்ட தேசிய பாடசாலையில் குறைந்தபட்சம் 03 ஆண்டுகாலம் சேவைக்காலத்தை பூர்த்திசெய்யவேண்டும்.

எச்.யு.பிரேமதிலக்க,
மேலதிக செயலாளர்,
கல்வி பண்புசார் விருத்தி.

H. U. Premathilake
Additional Secretary
(Education Quality Development)
Ministry of Education
"Isurupaya" Battaramulla.

ஒப்பம் : எம்.எம்.என்.டீ.பண்டார
செயலாளர்,
கல்வி அமைச்சு.

Tb/d/g1/nus1/circular/circular no. 2010.19